மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலுள்ள சாலைகளில் அதிக போக்குவரத்து நெரிசல் இருப்பதால், சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.*

2011-2012 ஆம் ஆண்டு 1,708.88 கிலோ மீட்டரும், 2012-2013 ஆம் ஆண்டு 1,659.37 கிலோ மீட்டரும், 2013-2014 ஆம் ஆண்டு 2,386.98 கிலோ மீட்டரும், 2014-2015 ஆம் ஆண்டு 1,478.63 கிலோ மீட்டரும், 2015-2016 ஆம் ஆண்டு 975.20 கிலோ மீட்டரும், ஆக மொத்தம், ஐந்து ஆண்டுகளிலே 8,209.06 கிலோ மீட்டர் சாலைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அகலப்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைகளை மேம்படுத்துவது, புதுப்பிக்கப்படுவது போன்ற பணிகளைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 48,371.84 கிலோ மீட்டர் சாலைகள் ஐந்து ஆண்டுக் காலத்திலே சீரமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சாலை சீரமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகியிருந்தால், நிதி நிலைமைக்கேற்ப அந்தச் சாலை சீரமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

சட்டக் கல்லூரி

***2722—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) சீர்காழியில் சட்டக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

ஏழை மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பது அரிதான ஒன்றாகிவிட்ட காரணத்தாலும், பொறியியல் கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கை குறைந்துவிட்ட காரணத்தாலும், எங்களுடைய சீர்காழி பகுதியிலே சட்டக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர வேண்டுகிறேன். அதோடு, பொது அறிவையும், சமுதாயத்தில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்வண்ணம், மேல்நிலைக் கல்வியில் அடிப்படை பொதுச் சட்டத்தினை ஒரு பாடமாகக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஏழு இடங்களில் அரசு*

2016 ஆகஸ்ட் 10]

சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றோடு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்திலே, அப்பல்கலைக்கழகத்தின்கீழ், தரமணியில், சீர்மிகு சட்டப் பள்ளியில் ஐந்து ஆண்டுகள் சட்டப் படிப்பு தற்போது பயிற்றுவிக்கப்படுகின்றது. மேலும், அப்பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் L.L.B. சீர்மிகு சட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகாவில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி நிறுவப்பட்டு, அப்பள்ளி 2013-2014 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழகத்தில் போதிய எண்ணிக்கையிலான அரசு சட்டக் கல்லூரிகளைக் கொண்டு சட்டக் கல்வி வழங்கப்படுவதாலும், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மற்றும் தேசிய சட்டப் பள்ளியின் அருகிலே சீர்காழி உள்ளதாலும், சீர்காழியில் தற்போது அரசு சட்டக் கல்லூரி தொடங்க அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், சட்டத் துறை குறித்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 12 ஆம் வகுப்பிலே பொது சட்டக் கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு அதை ஆராயும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது அறிவை, சட்ட விழிப்புணர்வை மாணவ சமுதாயத்தில் ஏற்படுத்துகின்றவிதத்திலே, மேல்நிலைக் கல்வியில் பொது சட்டக் கல்வியை ஒரு பாடமாகச் சேர்ப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களிடம் வேண்டுகோள் வைக்கப்படும் என்று மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

முற்பகல் 10-25

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர், பந்தலூர் வட்டங்களில் இரண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும், ஒரு மாவட்ட முன்சீப் நீதிமன்றமும், ஒரு கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றமும் இருக்கின்றன. மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றால், உதகைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட 90 கிலோ மீட்டர் பயணம் செய்து மேல்முறையீடு செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது. உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் முழுவதையும் நிறைவு செய்யும்வகையில் அங்கே* Court filing *இருக்கின்ற காரணத்தினாலும், மேல்முறையீடு செய்ய வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடலூரில் ஒரு* Sub Court *ஏற்படுத்த முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகின்றேன். மேலும், மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொண்டதைப்போல, வழக்கறிஞர்களுடைய போராட்டம் கிட்டத்தட்ட 45 நாட்களாக நீண்டுகொண்டே போகிறது. இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருவதால், இதில் அரசு முழுக் கவனம் செலுத்தி, அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில்* Sub Court *வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். உயர் நீதிமன்றத்தால் உரிய முறையில் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டால், அதனைத் தகுந்த முறையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதேபோன்று, வழக்கறிஞர்களின் போராட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். வழக்கறிஞர்களுடைய போராட்டத்தை நல்ல முறையில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம். சென்னையில் போராடுகின்ற வழக்கறிஞர்கள் சங்கமும், Tamil Nadu Bar Council

மற்றும் Bar Council of India-ம் இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இன்றைக்கு டில்லியில் சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் இனிமேல் கேள்வி கேட்கும்போது மூலக் கேள்வியை ஒட்டியே கேளுங்கள். உங்களுடைய தொகுதியையொட்டி துணைக் கேள்வியைக் கேளுங்கள். செங்கல்பட்டு சம்பந்தமாக கேள்வி கேட்கும்போது, நீங்கள் திடீரென்று கன்னியாகுமரி தொடர்பான கேள்வி கேட்டால், அதற்கு அமைச்சர் எப்படி பதில் வைத்திருப்பார்? நான் எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டும் என்றுதான் விரும்புகின்றேன். ஆகவே நீங்கள் மூலக் கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியாகக் கேளுங்கள். சம்பந்தா சம்பந்தமில்லாமல் நீங்கள் கேள்வியைக் கேட்டீர்களென்றால், அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்காது. இதனால் அவையின் நேரம் வீணாகின்றது. ஆகவே, இனிமேல் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்வியைக் கேட்கின்றபோது, மூலக் கேள்வியையொட்டி கேள்வி கேட்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

மேம்படுத்துதல்

***1777—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, மறமடக்கியிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*